ஆண்டறிக்கை 2021

ECSL

Ethics Excellence Education

இலங்கைப் பொறியியற் பேரவை

அரம்

நோக்கம்	2
பணிக்கூற்று	2
அறிமுகம்	3
நிறுவனத்துடன் தொடர்புடைய தகவல்கள்	4
தலைவரின் செய்தி	7
அமைப்பு வணிகம்	8
பேரவை	9
சபை உறுப்பினர்கள்	9
சபையின் அமர்வுகள்	10
செயல்பாடுகள் முடிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன	11
நிதி அறிக்கைகள்	13
தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் & ஆடிட்டர்கள் அறிக்கை	23

நோக்கம்

இலங்கையில் பொறியியற் தொழிலர்களின் மீதான மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தல் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக செயற்பாடுமிக்க பங்காளர் ஆதல்.

பணிக்கூற்று

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் தேசிய ரீதியில் உரிய தரத் தேர்ச்சி மற்றும் நாட்டின் அபிவிருத்திக்காக தொழில் தொடர்பாக அர்ப்பணித்து சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டவாறு இலங்கையில் பொறியியற் தொழிலர்களின் பல்வகைப் பிரிவுகளைப் பதிவு செய்வித்தல்.

அறிமுகம்

2017 மார்ச் 10 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் II ஆம் பிரிவிற்கான மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2017 இன் இலக்கம் 04 ஐ உடைய இலங்கைப் பொறியியற் பேரவை சட்டத்தின் கீழ் இலங்கைப் பொறியியற் பேரவை (ECSL) நிலை நாட்டப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் மூலம்,

- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழில் ரீதியான நிலைப்பாடுகள் மற்றும் நடத்தைகளை ஒழுங்கமைக்கும் மற்றும் முன்னெடுக்கும் பொறுப்பிற்கும்
- பொறியியல் தொழில் முனைவர்களைப் பதிவு செய்வதற்கும்
- அதனுடன் தொடர்புடைய விடயங்கள் அல்லது அதற்கு உரித்தான சமாந்தர தரப்பு விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும்

இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் தொழில் முனைவர்களைப் பதிவு செய்தல்

சட்டத்தின் பிரகாரம் அனைத்துப் பொறியியல் தொழில் முனைவர்களும் இலங்கைப் பொறியியற் பேரவையில் தம்மைப் பதிவு செய்ய வேண்டியுள்ளனர். சட்டத்தின் விளக்கக் குறிப்பின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு பொறியியல் தொழில் முனைவர்கள் உள்ளடங்கக் கூடிய வகுதிகள் ;

- பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள்
- இணைப் பொறியியலாளர்கள்
- சேர் நிலைப் பொறியியலாளர்கள்
- கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள்
- பொறியியல் தொழில்நுட்பவியலாளர்கள்

இலங்கையில் பணியாற்றக் கூடிய வெளி நாட்டு பொறியியல் தொழில் முனைவர்கள், நான்கு மாத காலப் பகுதிக்கு தற்காலிக அடிப்படையில் பதிவு செய்யும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இலங்கைப் பொறியியற் பேரவை கருதியிருப்பதுடன், அவரது/அவளது தொடர்புடைய தகைமைகள் தொடர்பில் இலங்கைப் பொறியியற் பேரவை திருப்தியடையுமாயின் பொறியியற் பேரவையின் விருப்பத்தின் பேரில் அப் பதிவை மேலும் நீடிக்கக் கூடியதாகவிருக்கும்.

நிறுவனத்துடன் தொடர்புடைய தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்
இலங்கைப் பொறியியற் பேரவை

சட்ட ரீதியான தன்மை
அரசுக்கு உரித்தான கண்காணிப்பு நிறுவனமாகக் காணப்படுதல்

சமாந்தர நிலை அமைச்சு
நீர்ப்பாசன அமைச்சு

ஆரம்பிக்கப்பட்ட திகதி
2018 ஆகஸ்ட் 24

சட்ட ஆலோசனை
திருமதி ருவனி ஹபுஆரச்சி

தலைமை அலுவலகம்
4 ஆவது மாடி, நீர்ப்பாசன திணைக்கள வலாகம்
230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி இலக்கம் - 0112588811
மின்னஞ்சல் - registrar@ecsl.gov.lk
இணைய தளம் - www.ecsl.gov.lk

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி

வரியை அடையாளம் காணக் கூடிய இலக்கம்
10276922802192003

சட்டத்தின் பிரகாரம் பங்குதாரிகள்
இலங்கைப் பொறியியல் நிறுவனம்
இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம்
மூன்றாம் நிலை மற்றும் தொழிற் துறை கல்வி ஆணைக் குழு
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் அதன் பொறுப்பு

இலங்கைப் பொறியியற் பேரவை நிலை நாட்டப்பட்டதன் வாயிலாக தாய் நாட்டின் கௌரவ மிக்க பொறியியல் தொழிற் துறை தொடர்பில் முன்பை விட அதிகளவான பங்களிப்பை வழங்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல் விசேடமான திருப்பு முனையாகக் காணப்பட்டது. அது வரலாற்றுக்கு முந்திய காலப் பகுதியைச் சேர்ந்த பல நூற்றாண்டுகள் வரை பரந்துபட்ட தெளிவான நிதியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நீண்ட காலமாக உலகம் முழுதும் பொறியியல் தொழிற் துறையின் சம கால சமாந்தர நிலையிலான குறிக்கோள்களை ஏனைய தேசத்தவர்கள் செயற்படுத்தும் விதத்தில் கட்டமைக்கப்பட்டவாறு கண்காணிப்பு மற்றும் பிரதிநிதித்துவ தேசிய நிறுவனத்தை நிலை நாட்டும் தேசிய தேவை தொடர்பில் நினைவுபடுத்திய வண்ணம் இலங்கையைச் சேர்ந்த பொறியியல் தொழிற் துறை தொடர்பில் முழுக் கவனம் செலுத்தப்பட்ட வண்ணமுள்ளது.

பங்குதாரிகளிடையிலும், தேசிய தலைமைத்துவத்தின் கீழும் நீண்ட காலமாக பேச்சு வார்த்தைகளும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆட்சிக்கு வந்த அரசுகளிடமிருந்து கிடைத்த அனுசரணை போன்ற அனைத்து விடயங்களினதும் இறுதியில் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைப் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் தேவையான சட்ட அதிகார வழங்குகை கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய அடிப்படையில் நிலை நாட்டப்பட்ட இலங்கைப் பொறியியற் பேரவை பொறியியல் தொழிற் துறையைக் கண்காணிக்கும் பொருட்டு அதிகாரமுள்ள அதியுயர்ந்த நிறுவனமாக நியமிக்கப்பட்ட வண்ணம் தேசிய தலைமைத்துவத்தை வகிக்கக் கூடிய பொறுப்புள்ள பாரிய செயற்பாட்டை அன்றிருந்து கையேற்று செயற்பட்ட வண்ணமுள்ளது. குறிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமை பெற்ற பொறியியல் தொழில் முனைவர்களைப் பதிவு செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்தல், அத் தொழில் முனைவர்களினது தகாத செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் மற்றும் இலங்கையில் பொறியியல் தொழிற் துறையில் ஈடுபடுவதுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் அரசு மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதித்துவத்தை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் சட்ட ரீதியாக அதிகாரம் வழங்கப்பட்ட நிறுவனமாக செயற்பட்ட வண்ணமுள்ளது.

இலங்கைப் பொறியியற் பேரவையின் பணிகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை முன்னெடுக்கும் பொருட்டு இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழில் நிலைகளை பேணுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழில் நடத்தைகளை பேணுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களை 06 வகுதிகளின் கீழ் பதிவு செய்தல்
- இலங்கையில் பொறியியல் தொழிற் துறையில் ஈடுபடுவதுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் அரசு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநித்துவத்தை வெளிக் காட்டுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது பதிவு ஆவணங்களைப் பராமரித்தல்
- பதிவு செய்யப்பட்ட பொறியியல் தொழில் முனைவர்கள் தொடர்பான பட்டியலை இடைக்கிடையில் பிரசுரித்தல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழிற் சார் முறைக்கேடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தல்
- பேரவையின் பணிக் குழுவுக்கு செலுத்த வேண்டிய சம்பளத்தை தீர்மானித்தல்
- பதிவு செய்தல் தொடர்பில் செலுத்த வேண்டிய கட்டணங்களை தீர்மானித்தல்
- பதிவு செய்கை சான்றிதழை வெளியிடுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது தர நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான பிற எக் காரணியாவது
- அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சமமான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை வழங்குதல்

சட்டத்தின் பிரகாரம் பொறியியல் தொழில் முனைவர்கள் உரித்தான வகுதிகள் மற்றும் தகைமைகள்

<u>பட்டயம் பெற்ற பொறியியலாளர்</u>

1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் பட்டயம் பெற்ற பொறியியலாளர்

<u>இணைப் பொறியியலாளர்</u>

1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பெறியியலில் நான்காண்டு முழு நேரப் பட்டம் அல்லது 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினது இணை உறுப்பினரொருவர்

<u>சேர் நிலைப் பொறியியலாளர்</u>

1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மூன்றாண்டு முழு நேரப் பட்டம்

<u>கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்</u>

1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவகத்தினதும் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள்.

<u>பொறியியல் டிப்ளோமாதாரி</u>

1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்பவியல் நிறுவகத்திலிருந்து பெறப்பட்டதுமான பொறியியல் டிப்ளோமா.

<u>பொறியியல் தொழில்நுட்பவியலாளர்</u>

(i) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதும், பொறியியல் தொழில் நுட்பவியலின் தேசிய தொழிற் சார் தகைமை மட்டம் IV (NVQ Level) அல்லது சமமான தகைமை.

(ii) பொறியியல் தொழில்நுட்பவியலில் ஓராண்டு முழு நேரக் கல்வி கற்கை நெறி மற்றும் இயைபான துறையில் ஓராண்டுக் கைத்தொழில் அனுபவத்தைப் பெற்றவர் அல்லது ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஒரு தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்டதுமான டிப்ளோமாவை அல்லது தொழில்நுட்பவியற் சான்றிதழை வைத்திருப்பவர் .

தலைவரின் செய்தி



திலக் டி சில்வா திரு

BSc Eng., MSc, CEng(SL), CEng(UK), CITP(UK), FIE(SL), FIET(UK), FBCS(UK), SMIEEE(USA),MCS(SL)

இலங்கைப் பொறியியலாளர் பேரவையின் தலைவர் என்ற வகையில் 2021ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன். கடந்த ஆண்டு நிச்சயமற்றத் தன்மை நிறைந்த ஒரு சவாலான ஆண்டாக இருந்த போதிலும் இவை அனைத்திற்கும் மத்தியில் எங்கள் பணியை முன்னெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம்.

கோவிட் 19 தொற்று நோய்க் காரணமாக வருடத்தின் பெரும்பகுதி நாடு முழுமையாக மூடப்பட்டிருந்த போதிலும் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஒவ்வொரு மாதமும் மாதாந்திரக் கூட்டங்கள் இடைநிறுத்தப்படாமல் தொடர்ந்து பன்னிரண்டு முழுமையான மாதாந்த கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அவற்றில் அரைவாசிக் கூட்டங்கள் நிகழ்நிலையில் நடாத்தப்பட்டன. எமது தீர்மானத்திற்கு எவ்வித இடையூறுமின்றி மிகவும் வினைத்திறனான வகையில் அக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

எமது நிதி நடவடிக்கைகளை முழுமையாக முன்னெடுப்பதற்கு எண்ம(டிஜிடல்) வங்கி முறைமை ஆரம்பிக்கப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை உரிய காலத்தில் நிகழ்நிலைத் தொழில்நுட்பம் ஊடாக ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பன தாமதமின்றி எண்ம(டிஜிடல்) வங்கி மூலம் செலுத்துதல் தற்போதைய சூழ்நிலையில் பாரிய வெற்றியாகக் கருத முடியும்.

நீண்ட காலமாகப் பதிவு செய்தலைத் தொடங்க முயற்சித்தும் முடியாமல் போன பொறியாளர் தொழில்நுட்ப வல்லுநர்களின் பதிவு செய்தலை தொடங்குவது எங்களது பதிவு செயற்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். இதற்கு மேலதிகமாக எமது இணையத்தளத்தில் தகுதி வாய்ந்த பொறியியற் தொழில்நுட்பவியலாளர்களின் விபரங்களை வெளியிட்டு மிகவும் சிறந்த பொறியியலாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பொதுமக்கள் அவர்களைக் கண்டு பிடித்து தெரிவு செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமும் பொதுச் சேவை ஒன்று மேற்கொள்ளபட்டுள்ளது.

மேலும் பொறியியல் வல்லுனர்களைப் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மூன்று மொழிகளிலும் வானொலி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் என்பன வெளியிடப்பட்டன.

மிகவும் செயற்றிறன்மிக்க தொடர்ச்சியான மற்றும் விரைவு சேவை வழங்குதலின் தேவையை நிறைவு செய்ய தகவல் தொழில்நுட்பம் உச்ச நிலையில் பயன்படுத்தப்படுவதோடு இதனை ஏனைய நிறுவனங்களும் செயற்பாட்டு ரீதியாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக மிகவும் சிறந்த யோசனையினைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகும்.

எமது முதலாவது ஆண்டறிக்கையான 2019 ஆரம்ப ஆண்டறிக்கையை அரசாங்கத்தின் வழிமுறைகளை ஆராய்ந்து அதன் பணிகளை நிறைவு செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முடிந்தமை முக்கியமான வெற்றியாக கருத முடியும். மேலும் பொறியிலாளர் பேரவையின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் அரசாங்க நிறுவனத்தின் ஒரு முழுமையான வடிவத்திற்கு ஏற்ப பழஎ.டம என்ற வகையில் மொழிபெயர்க்கப்பட்டு றறற.நஉளட.பழஎ.டம என வெளியிடப்பட்டுள்ளது.


2020ஆம் ஆண்டில் 15,758 ஆக இருந்த பதிவு செய்யப்பட்ட பொறியியற் தொழில்களின் எண்ணிக்கை 2021ஆம் ஆண்டில் 17,485 ஆக உயர்ந்துள்ளது மகிழ்ச்சியான விடயமாகும். இந்த அதிகரிப்பானது இலங்கையில் பொறியியற் தொழிலர்களின் உச்ச திறனைப் பாதுகாப்பதற்காக நிலையான அர்ப்பணிப்பினை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. நாங்கள் அனைத்து பதிவு செய்யப்பட்ட பொறியியற் தொழிலர்களுக்கும் சான்றிதழ் வழிங்குதலைத் தொடர்ந்து செய்தோம். அதன் நம்பகத் தன்மையை எமது இணையத்தளத்திற்கு சென்று உறுதி செய்து கொள்வதற்கான வழிமுறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தை எமது கவனத்திற் கொள்ளும் போது எமது சேவைகள் மற்றும் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கான எங்களுடைய உறுதிப்பாடு அசைக்க முடியாததாக உள்ளது. எமது வினைத்திறனை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றின் மிக உயர்ந்த மட்டங்களைப் பேணுதல், மற்றும் இலங்கையில் தொழில்முறை பொறியியற் தரம் தொடர்பாக தோற்றுதல் ஆகியவற்றின் எமது கவனம் மாற்றமடையாமல் உள்ளது.

இறுதியாக எமது அனைத்து தரப்பினருக்கும் எங்கள் மீது அவர்களின் அசைக்க முடியாத ஒத்துழைப்பு மற்றும் எம்மீது கொண்ட நம்பிக்கை தொடர்பாக நான் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியில் மிகவும் சவாலான காலங்களில் கூட எங்கள் இலக்குகளை அடைய எங்களுக்கு சக்தியை வழங்கிய எங்கள் குழுவுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

***

அமைப்பு வணிகம்



பேரவை

பேரவை 17 அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக காணப்படுவதுடன், அதில் 04 அங்கத்தவர்கள் உத்தியோகபூர்வமாக (பேராசிரியர் பதவிக்குக் குறைந்த பதவிகளை வகிக்காத பொறியியல் பீடங்களைச் சேர்ந்த மூன்று பீடாதிபதிகளையும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் துறை கல்வி ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம்) பதவியை வகிக்கக் கூடிய அங்கத்தவர்களாகக் காணப்படுவதுடன், ஏனைய 13 அங்கத்தவர்களையும் இலங்கைப் பொறியியற் பேரவை உரித்தான சமாந்தர நிலை அமைச்சு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர்.

"நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்கள்" ஒவ்வொரு இரண்டு வருடத்துக்கொரு முறையும் இலங்கைப் பொறியியற் பேரவையினால் பெயரிடப்படுகின்ற பல்வேறு பொறியியல் துறைகளை பிரதநிதித்துவப்படுத்துகின்ற ஏழு பட்டயம் பெற்ற அங்கத்தவர்களும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தினால் ஒவ்வொரு இரண்டு வருடத்துக்கொரு முறையும் பெயரிடப்படுகின்ற பல்வேறு பொறியியல் துறைகளை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற பட்டயம் பெற்ற பொறியியலாளரொருவரினாலும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் சார் கல்வி ஆணைக் குழுவினால் பெயரிடப்படுகின்ற பொறியியல் தொழில்நுட்பவியலாளர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்களிடையே பட்டயம் பெற்ற பொறியியலாளர்களின் ஒருவர் இலங்கைப் பொறியியற் பேரவையின் தலைவராக நியமிக்கப்படுகின்றார். 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதல் நியமிக்கப்பட்ட பேரவையின் அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

சபை உறுப்பினர்கள்

திலக் டி சில்வா, தலைவர் திரு

BSc Eng., MSc, CEng(SL), CEng(UK), CITP(UK), FIE(SL), FIET(UK), FBCS(UK), SMIEEE(USA),MCS(SL)

பேராசிரியர் என்.கே. விக்கிரமாராச்சி, உறுப்பினர் (முன்னாள்)

BSc Eng., MSc, PhD, DIC, CEng, MIE(SL)

பேராசிரியர் ஜி.பி.பி. ஹெராத், உறுப்பினர் (முன்னாள் பதவி)
BSc Eng., MEng, PhD

பேராசிரியர் ஏ. அத்புதராஜா, உறுப்பினர் (முன்னாள்) (26 ஜூன் 2021 வரை)
BSc Eng.(Hons), PhD, CEng, MIE(SL)

பி.கே.யு.ஏ. விக்கிரமசிங்க, உறுப்பினர் (முன்னாள் அதிகாரி) (ஜூலை 12, 2021 முதல்)
BSc Eng, M.Ed (Manchester), MSc (Moratuwa), MIE (SL), CEng, MITD (UK)

டாக்டர். கே. பிரபாகரன், உறுப்பினர் (முன்னாள்) (26 நவம்பர் 2021 முதல்)
BSc.Eng, MEng, DEng, CEng, MIEEE, MIET

டாக்டர் ஆனந்த ரணசிங்க, உறுப்பினர் (ஜூலை 1, 2021 முதல்)
BSc, MTech, MEng, LLM (Colombo) LLM (Wales), PhD, CEng, FIStructE (UK), FICE (UK), FIE (SL), FSSE, FCIArb, Attorney at Law

ஜே. திரு. மேகொட, உறுப்பினர்
BSc Eng.(Hons), PGD, MBA, CEng, FIE(SL), Int PE(SL), MIEEE(USA)

கே.பி.ஐ.யு. தர்மபால, உறுப்பினர்
BSc Eng, CEng, FIE(SL), FICE(UK), FIE(Aust.), MASCE(USA), MSSE(SL), MACE(SL),IntPE(SL), PEng(Aust)

அது. திரு மணம்பேரி, உறுப்பினர்

BSc Eng, MS Eng, MBA, CEng, FIE(SL)

ஜே.ஏ.ஜி.ஆர். ஜயலத், உறுப்பினர்
BSc Eng., MSc Eng. , MEcon, PG(Dip)IT, PG(Dip) Const Mgt. FIE(SL), FCIHT(UK), LM(IRC), CMILT, MSSE(SL)

கோசல கம்புரதெனிய, உறுப்பினர் திரு
BSc Eng, PG Dip(Ind. Eng), MBA, Dip(Com. Arb), Attorney-at-Law, CEng, FIE(SL), IntPE(SL), MIET, MIEEE

டாக்டர் டி.ஏ.ஜி. குணசேகரன், உறுப்பினர்
M Eng, MSc Eng (Hons), PhD, CEng, IEng, MIE(SL), FIIE(SL)

டி.எஸ்.செனரத், உறுப்பினர் திரு
MCGI(UK), IEng , MEG(SL), DTM(USA), FIIE(SL)

கே. ஆரியவன்ச, உறுப்பினர் திரு
GCGI(UK), MCGI(UK), IEng, MASCE(USA), MEG(SL), FIIE(SL)

உ.பி.பி. கவிகேசவா, உறுப்பினர் (12 பிப்ரவரி 2021 வரை)
BSc (Hons), MCGI (UK), IEng, TEng. AIE(SL), MEG(SL), MIAENG, FIIE(SL)

பி.ஏ.டி.ஆர். திரு. சந்திரசிறி, உறுப்பினர் (18 அக்டோபர் 2021 முதல்)
GCGI(UK), FIIESL, Ieng

டி. அபேசிறிவர்தன, உறுப்பினர் திரு
BSc Eng, CEng, MIE(SL)

எஸ்.யு.கே. ரூபசிங்க, உறுப்பினர்
PGDBM, PGCTM, AMIE(SL)

<u>பணிக் குழுவிலுள்ள பணியாட்களின் எண்ணிக்கை</u>

		எண்ணிக்கை
1.	தலைமை நிறைவேற்று அதிகாரி	01
2.	பதிவாளர்	01
3.	தலைமை தகவல் தொழில்நுட்ப அதிகாரி	01
4.	கணக்காளர்	01
5.	தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	01
6.	முகாமைத்துவ உதவியாளர்	01
7.	தனிப்பட்ட உதவியாளர்	01
8.	அலுவலக உதவியாளர்	01

சபையின் அமர்வுகள்

15 ஜனவரி 2021	08 ஜூலை 2021
11 பிப்ரவரி 2021	12 ஆகஸ்ட் 2021
12 மார்ச் 2021	09 செப்டம்பர் 2021
08 ஏப்ரல் 2021	14 அக்டோபர் 2021
12 மே 2021	11 நவம்பர் 2021
10 ஜூன் 2021	09 டிசம்பர் 2021

செயல்பாடுகள் முடிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன

செயல்பாடுகள் முடிக்கப்பட்டன

1) பொறியியல் பயிற்சியாளர்களின் பதிவு

2021 ஆம் ஆண்டிற்கான பதிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

➢ பட்டயப் பொறியாளர்	- 5,140
➢ இணை பொறியாளர்	- 10,915
➢ இணை பொறியாளர்	- 117
➢ ஒருங்கிணைந்த பொறியாளர்	- 464
➢ பொறியியல் டிப்ளமேட்	- 792
➢ பொறியியல் தொழில்நுட்ப வல்லுநர்	- 57
மொத்தம்	- 17,485

2) 01 ஜனவரி 2021 முதல் 31 டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் 12 கவுன்சில் கூட்டங்கள் நடைபெற்றன. கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க பன்னிரண்டு கூட்டங்களில் ஆறு ஆன்-லைனில் நடைபெற்றன.

3) சம்பளம், கொடுப்பனவுகள், EPF, ETF மற்றும் தாமதங்களைக் குறைப்பதற்காக முடிந்தவரை பிற கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வங்கி ஆன்-லைன் பரிவர்த்தனைகளைத் தொடங்கியது.

4) இன்ஜினியரிங் டெக்னீஷியன் பிரிவில் ஒரு செயல்முறை இறுதி செய்யப்பட்டு, பதிவு தொடங்கப்பட்டது.

5) 14 டிசம்பர் 2012 இன் PED 55 பொது நிறுவன சுற்றறிக்கையின்படி ECSL க்காக தணிக்கைக் குழு நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கியது.

6) ECSL நிதி அறிக்கைகள் பொது சேவை கணக்கியல் தரநிலைகளுக்கு (PSAS) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

7) கவுன்சில் கூட்டத்தை நடத்துவதற்கான நடைமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8) ECSL இன் முதல் ஆண்டு அறிக்கை (2019 ஆம் ஆண்டிற்கான) நிறைவடைந்துள்ளது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அறிக்கை வெளியிடும் நடவடிக்கையில் உள்ளது.

9) அலுவலகப் பணிகளுக்கு இயன்ற அளவு தகவல் தொழில்நுட்பத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதன் விளைவாக, தொற்றுநோய்களின் போது ECSL தனது கடமைகளை தாமதமின்றி நிறைவேற்றியுள்ளது.

10) ஒரு தொடர் நடவடிக்கையாக, முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அனைத்து பொறியியல் பயிற்சியாளர்களுக்கும் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன, ஆனால் 2021 ஆம் ஆண்டிற்கான சரியான நேரத்தில் பதிவு செய்யத் தவறியது.

11) IESL உடன் பதிவு செயல்முறையை மேலும் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12) பட்டயப் பொறியாளர்களைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம் மற்றும் உண்மையான பொறியியல் பயிற்சியாளர்களை அடையாளம் காண்பதில் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் எவ்வாறு உதவியாக இருக்கும் என்பதைப் பற்றி பொது மக்களுக்குத் தெரிவிக்க மூன்று மொழிகளிலும் செய்தித்தாள்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

13) ECSL சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக, பொறியியல் பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு போன்றவற்றின் போது ECSL பதிவைக் கருத்தில் கொள்ளுமாறு அனைத்து பொறியியல் நிறுவனங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

14) ECSL க்கான www.ecsl.gov.lk டொமைன் பெயர் அறிமுகப்படுத்தப்பட்டது.

15) தகவல் சேகரிக்கத் தொடங்கியது:

a. இலங்கையில் பொறியியல் பட்டப் படிப்புகளை நடத்துதல்

b. இலங்கையில் நடத்தப்படும் பொறியியல் டிப்ளோமா படிப்புகள்

c. இலங்கையில் பயிற்சி பெறும் பொறியியல் துறைகள்

16) பின்வருவனவற்றில் விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன:

a. பாத்திரங்கள், பொறுப்புகள் மற்றும் திறமைகள்

b. ஒழுங்குமுறை செயல்முறை

c. வெளிநாட்டு பொறியியல் பயிற்சியாளர்களின் பதிவு

d. தொழில்துறையில் "தொழில்நுட்ப வல்லுநர்கள்" இடம்.

e. ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரி சலுகைகள்.

17) பதிவு செய்யப்பட்ட அனைத்து பொறியியல் பயிற்சியாளர்களுக்கும் மின்னணுச் சான்றிதழ்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. சான்றிதழின் நம்பகத்தன்மை www.ecsl.gov.lk என்ற இணையதளத்தில் சரிபார்ப்பதற்காகக் கிடைக்கிறது

செயல்பாட்டில் உள்ள செயல்பாடுகள்

1) மீதமுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தயாரித்தல்

2) வெளிநாட்டு பொறியியல் பயிற்சியாளர்களை பதிவு செய்வதற்கான செயல்முறையைத் தயாரித்தல்

நிதி அறிக்கைகள்

நிதிக் கூற்று

நிதி செயலாற்றுகைக் கூற்று

இறுதி ஆண்டு காலப் பகுதி தொடர்பாக	குறிப்பு இலக்கம்	2021 ரூபா. ‘000	2020 ரூபா.‘000	2019 ரூபா.‘000
செயற்படுத்துகை பணிகளின் வாயிலாக ஈட்டப்பட்ட வருமானம்	01	18,127	15,757	17,033
திறைசேரி கையளிப்புகள் - மீண்டு வரும்		3,495	800	3,548
போலி வருமானம்	02	1,260	1,008	
மொத்த வருமானம்		22,882	17,565	20,581
நிர்வாக செலவு	3.1	(8,611)	(5,938)	(2,805)
ஒப்பந்தங்களுக்கு வந்துள்ள சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவுகள்	3.2	(746)	(659)	(454)
ஏனையை செயற்படுத்துகை செலவுகள்	3.3	(1,137)	(633)	(2,625)
மொத்த செலவு		(182)	(52)	
நிர்வாக செலவு		**(10,676)**	**(7,282)**	**(5,884)**
செயற்படுத்துகைகளின் வாயிலான மேலதிகம் / (குறைவு)		**12,206**	**10,283**	**14,697**
வரி		(1,656)	(1,329)	(1,086)
காலப் பகுதி தொடர்பான மேலதிகம் / (குறைவு)		**10,550**	**8,954**	**13,611**

	குறிப்பு இலக்கம்	2021 ரூபா. ‘000	2020 ரூபா. ‘000	2019 ரூபா. ‘000
சொத்துக்கள்				
நடைமுறை சொத்துக்கள்				
நிதி மற்றும் நிதிக்கு நிகரான	04	2,310	2,235	2,038
நிதி மற்றும் நிதிக்கு நிகரான - குறுகிய காலப் பகுதிக்கு	05	30,926	20,008	14,000
முதலீடு	06	567	1,194	3,731
வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்	07	81	23	30
		33,883	23,460	19,799
மொபைல் அல்லாத சொத்துக்கள் சொத்து,யந்த்ரோபகாரன் மற்றும் உபகரணங்கள்	08	2,541	3036	2,541
மொத்த சொத்துக்கள்		**36,424**	**26,496**	**22,340**
பொறுப்புகள்				
நடைமுறை பொறுப்புகள்				
ஏனைய நிதியங்கள் மற்றும் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள்	09	1,528	1,523	6,188

நடைமுறையற்ற பொறுப்புகள்				
தாமத வருமானம் (அரசின் கையளிப்பாக)	10	1,779	2,408	3,036
மொத்த பொறுப்புகள்		**3,307**	**3,931**	**9,224**
நிகர பொறுப்புகள்		**33,117**	**22,565**	**13,116**
நிகர சொத்துக்கள் / உரிமங்கள் மூலதனம் மற்றும் உள்ளடக்கம்				
பங்களிப்பு மூலதனம்	11			-
ஒட்டு மொத்த இலாபம் / (குறைப்பாடு)	12	33,117	22,565	13,611
மொத்த நிகரச் சொத்துக்கள் / உரிமங்கள்		**33,117**	**22,565**	13,611

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் 05 இலிருந்து 11 வரையான பக்கங்களின் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கத்தின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.

பொறியியற் பேரவைக்கு உரித்தான, இன்றளவிலுள்ள அறிக்கைகளின் பிரகாரம் மேற்குறித்த நிதிக் கூற்றுக்கள் உண்மையான மற்றும் சரியான விடயங்களை வெளிக் காட்டுவதாக சான்றுபடுத்துகின்றேன்.

பீ. ஏ. பீ. சில்வா
கணக்காளர் (பதில் கடமையாற்றும்)
நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன் வைப்பதுடன் தொடர்புடையதாக பேரவையின் அங்கத்தவர்கள் பொறுப்பு கூற வேண்டியுள்ளனர்.
பொறியியற் பேரவை சார்பாக அனுமதிக்கப்பட்டு கைச்சாடிடப்பட்டது.

எந்திரி திலக் டி சில்வா
தலைவர்
இலங்கைப் பொறியியற் பேரவை

எந்திரி டி. எஸ். செனரத்
பேரவையின் அங்கத்தவர்

புனித வஸ்துக்கள் / பங்குகளின் மாற்றங்கள் பற்றிய அறிக்கை

டிசம்பர் 31 வன போது

குறிப்பு: *12*

	பங்களித்தது மூலதனம்	ஒட்டுமொத்த லாபம்/பற்றாக்குறை	முழு
	000 ரூபாய்	000 ரூபாய்	000 ரூபாய்
31 டிசம்பர் *2018* இல் இருப்பு B/F	-	-	-
காலத்திற்கான உபரி / (குறைபாடு)		13,611	13,611
	-	**13,611**	**13,611**
31 டிசம்பர் 2019 நிலவரப்படி இருப்பு			
31 டிசம்பர் *2019* இல் இருப்பு B/F		13,611	13,611
		8,954	**8,954**
காலத்திற்கான உபரி/(பற்றாக்குறை).			
	-	**22,565**	**22,565**
31 டிசம்பர் 2020 நிலவரப்படி இருப்பு		22,565	22,565
31 டிசம்பர் 2020 நிலவரப்படி இருப்பு		**10,552**	**10,552**
காலத்திற்கான உபரி/(பற்றாக்குறை).			
31 டிசம்பர் *2021* நிலவரப்படி இருப்பு	-	**33,117**	**33,117**

பண புழக்கங்களின் அறிக்கை

	2021 ரூபா. '000	2020 ரூபா. '000	2019 ரூபா. '000
செயற்படுத்துகை நடவடிக்கைகளின் ஊடாக பெறப்பட்ட நிதியோட்டம்			
திறைசேரியின் கையளிப்புகளுக்கு முன்னைய ஆண்டின் மேலதிகம் (குறைப்பாடு) (மீண்டு வரும்)	7,055	8,154	11,149
ஒன்று சேர்த்த : கிடைக்கப் பெற்ற திறைசேரி கையளிப்பு (மீண்டு வரும்)	3,495	800	3,548
	182	52	-
சேர்: சிதைவு			
வருடத்தின் வரிகளுக்கு முன்னைய மேலதிகம் / (குறைப்பாடு)	**10,732**	**9,006**	**14,697**

பணமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

செலுத்த வேண்டிய பணத் தொகை அதிகரித்தல்	5		(4665)		5,102	
ஏனைய நடைமுறை சொத்துக்கள் அதிகரித்தல்	571	576	2,545	(2,120)	(3,761)	1,341
செயற்படுத்துகை நடவடிக்கைகளின் வாயிலான நிகர நிதியோட்டம்		**11,308**		**6,886**		**16,038**
முதலீடுகளின் கீழான நிதியோட்டம்						
சொத்துக்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(315)		(681)		(3,140)	
முதலீட்டு செயற்பாடுகளின் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற நிகர நிதியோட்டம்		**(315)**		**(681)**		**(3,140)**
நிதிச் செயற்பாடுகளின் வாயிலாக கிடைக்கப் பெற்ற நிதியோட்டம்						
அரச கையளிப்புகள் (சொத்துக்கள் இயந்திரோபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மூலதனம்)	-		-		3,140	
நிதிச் செயற்பாடுகளின் வாயிலாக கிடைக்கப் பெற்ற நிகர நிதியோட்டம்		-		-		**3,140**
பணம் மற்றும் பணத்துக்குச் சமமான நிகர அதிகரிப்பு / (குறைவு)க்		**10,993**		**6,205**		**16,038**
காலப் பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்தின் சராசரி		**22,243**		**16,038**		**-**
காலப் பகுதியின் இறுதியில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்தின் சராசரி		**33,236**		**22,243**		**16,038**

நிதியோட்டக் குறிப்புகளுடன் தொடர்புடைய குறிப்புகள்

பணம் மற்றும் பணத்துக்கு சமமான வங்கி மீதிகள் உள்ளடங்குகின்றன. பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை உள்ளடங்கிய நிதியோட்டக் கூற்றில் கீழே குறிப்பிடப்படுள்ள நிதி நிலைமைகள் உள்ளடங்குகின்றன.

	2021 ரூபா. '000	2020 ரூபா. '000	2019 ரூபா. '000
வங்கியின் நடைமுறைக் கணக்கின் மீதி (குறிப்பு இலக்கம் 04)	2,310	2,235	2038
முதலீடு - நிலையான வைப்புகள் (குறுகிய கால) குறிப்பு இலக்கம் 05)	30,926	20,008	14,000
	33,236	22,243	16,038

நிதியோட்டக் குறிப்புகளுடன் தொடர்புடைய குறிப்புகள்

செயற்படுத்துகை நடவடிக்கைகளின் மூலமான வருமானம்

		2021	2020	2019
குறிப்பு இலக்கம்:01		ரூ. '000	ரூ. '000	ரூ. '000
பதிவு செய்தல்				
பதிவு 2021	உறுப்பினர்களின் எண்ணிக்கை			
பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள்	5,140	5,140	4906	5,409
இணைப் பொறியியலாளர்கள்	10,915	10,915	9716	10,491
சேர் நிலைப் பொறியியலாளர்கள்	117	117	91	129
கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள்	464	464	446	410
பொறியியல் டிப்ளோமாதாரிகள்	792	792	598	594
பொறியியல் தொழில்நுட்ப வல்லுநர்கள்	57	57		
முழு மொத்தம் 2021	17,485	17,485	15,757	17,033
பதிவு - நிலுவைத் தொகை		147		
பட்டயப் பொறியாளர்கள்		459		
இணை பொறியாளர்கள்		5		
இணை பொறியாளர்கள்		11		
ஒருங்கிணைந்த பொறியாளர்கள்		20		
பொறியியல் டிப்ளமோ பெற்றவர்கள்		642		
துணை சேகரிப்பு - பதிவு - நிலுவைத் தொகை				
மொத்த தொகை		18,127	15,757	17,033
குறிப்பு எண்: 02				
வட்டி வருமானம்		180	224	
வட்டி வருமானம்: A/C எண் BOC 85326186		250	63	
வட்டி வருமானம்: A/C எண்				

BOC 86301038			
	511	721	
வட்டி வருமானம்: A/C எண் BOC 85326167			
	297		
வட்டி வருமானம்: A/C எண் BOC 87555504			
வட்டி வருமானம்: சேமிப்பு கணக்கு	22		
மொத்த தொகை	1,260	1,008	
செலவு			
குறிப்பு இலக்கம்: 3.1			
குறிப்பு இலக்கம்			
சம்பளம் மற்றும் ஊதியம்	5,302	2466	918
பேரவையின் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு	3,309	3472	1,887
மொத்தம்	**8,611**	**5938**	**2,805**
குறிப்பு: 3.2			
ஒப்பந்தத்துக்கு வந்த சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவுகள்			
தபால் மற்றும் தொலைபேசிக் கட்டணம்	335	289	18
தகவல் தொழில்நுட்ப செலவுகள்	136	114	165
உபசரிப்பு	108	92	68
கணக்காய்வுக் கட்டணம்		75	75
அச்சிடல்	168	10	34
மதியுறைக் கட்டணம்		52	49
நானாவித செலவுகள்			33
அலுவலக் உபகரணங்களின் பராமரிப்பு		27	12
மொத்தம்	**746**	**659**	**454**
குறிப்பு: 3.3			
ஏனைய செயற்படுத்துகை செலவுகள்			
காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள்	172	30	3
வார சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்	224	286	600
வங்கிக் கட்டணங்கள்	18	13	3
பிற இயக்க செலவுகள்	89	88	2,016
விளம்பர செலவுகள்	197		

விழிப்புணர்வு நிகழ்ச்சி	108		
பயணம் மற்றும் போக்குவரத்து	49	22	
தண்ணீர்	13	24	
இணைய மேம்பாடு	27	170	
சட்ட கட்டணம்	210		
உறுப்பினர் கட்டணத்தை திருப்பிச் செலுத்துதல்	24		
மொழிபெயர்ப்பு செலவுகள்	4		
மொத்தம்	**1,137**	**633**	**2,625**
	182	52	
சிதைவு			
முழு மொத்தம்	**10,676**	**7,282**	**5,884**

	2021 ரூபா. '000	2020 ரூபா. '000	2019 ரூபா. '000
குறிப்பு இலக்கம்:04			
பணம் மற்றும் பணத்துக்கு நிகரான			
1. இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) (நடைமுறை கணக்கு இலக்கம் 83585687)	146	(1,871)	1,570
2. இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) (நடைமுறை கணக்கு இலக்கம் 83591633)	3	4,091	453
கட்டு நிதி		15	15
சேமிப்பு கணக்கு	2,161		
முழு மொத்தம்	**2,310**	**2,235**	**2,038**
குறிப்பு இலக்கம்:05			
பணம் மற்றும் நிகரான - முதலீடுகள் (குறுகிய கால)			
(1) நிலையான வைப்பு - இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) *85326167*	11,232	10,721	10,000
(2) நிலையான வைப்பு - இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) (83301038)	5,299	5,063	4,000
(3) நிலையான வைப்பு - இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) (85326186)	4,395	4,224	
(4) நிலையான வைப்பு - இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்)) (87555504)	10,000		
முழு மொத்தம்	**30,926**	**20,008**	**14,000**

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் தொடர்ந்தன;

	2021 ரூபா. ‘000	2020 ரூபா. ‘000	2019 ரூபா. ‘000
குறிப்பு இலக்கம்:06			
வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய பணம்			
கிடைக்க வேண்டிய அங்கத்துவ கட்டணம்		943	3,731
பெறத்தக்க VAT (அதிகப் பணம்)	250	250	
இலங்கை பொறியியல் நிறுவனம்	237		
நிலையான வைப்பு வட்டி பெறத்தக்கது	79		
முழு மொத்தம்	**567**	**1,194**	**3,731**
குறிப்பு இலக்கம்:07			
முன்னைய கொடுப்பனவுகள்			
தகவல் தொழில் நுட்ப செலவுகள்	78		30
நீர் வைப்பு	3	3	
ஊழியர் வருங்கால வைப்பு நிதி		17	
ஊழியர் வருங்கால வைப்பு நிதி		3	
முழு மொத்தம்	**81**	**23**	**30**

குறிப்பு எண்:08

சொத்து, இயந்திரங்கள், உபகரணங்கள்

குறிப்பு இலக்கம்: 09

ஏனைய நிதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள்			
1. கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பான நிதியங்கள்	106	150	75
2. செலுத்த வேண்டிய வரி		18	17
3. ஏனைய கொடுப்பனவுகள்	54	26	7
4. வருமான வரிக் கொடுப்பனவுகள்	1,255	1,329	1,086

5. ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி செலுத்த வேண்டும்	81			
6. செலுத்த வேண்டிய பணியாளர்கள் அறக்கட்டளை நிதி	12			
7. பொறியியல் தொழில்நுட்ப பதிவு கட்டணம்	20			
முழு மொத்தம்	**1,528**	**1,523**	**6,188**	

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் தொடர்ந்தன
சொத்து, இயந்திரங்கள், உபகரணங்கள்

குறிப்பு இலக்கம் : 08

செலவு	2021.01.01 ஆம் திகதிய மீதி ரூபா '000	கூட்டுத் தொகை ரூபா '000	வெளிப்படுத்துகை / விடுவிப்பு ரூபா '000	2021.12.31 ஆம் திகதிக்கு மீதி ரூபா. '000
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	3,041		-	3,041
அலுவலக உபகரணங்கள்	107.69	47		155
கணினிகள் மற்றும் பாகங்கள்	673	268	-	941
முழு மொத்தம்	**3,822**	**315**	**-**	**4,137**

சிதைவு	*01.01.2021* ஒரு நாளைக்கு இருப்பு ரூ. *'000*	தொகுப்புகள் ரூ. *'000*	விலக்குகள் / விலக்குகள் ரூ. *'000*	*31.12.2021* நிலவரப்படி இருப்பு ரூ. *'000*
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	709	609		1,318
அலுவலக உபகரணங்கள்	5	23		28
கணினிகள் மற்றும் பாகங்கள்	71	179	-	250

	785	811	-	1,596
பெரிய மொத்தம்				
புத்தகங்களின் நிகர மதிப்பு	3,037			2,541

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் தொடர்ந்தன;

குறிப்பு: 10

ஒத்திவைக்கப்பட்ட வருமானம்

	01.01.2021 நிலவரப்படி இருப்பு	வருடத்தில் சேகரிப்புகள்	ஆண்டுக்கான கட்டணம் சிதைவு	மறுமதிப்பீடு சரிசெய்தல்/விலக்குகள்	31.12.2021 நிலவரப்படி இருப்பு
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
தளபாடங்கள்	2,331		608		1,723
பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்					
கணினிகள் மற்றும் பாகங்கள்	76		20		56
பெரிய மொத்தம்	2,407	-	628	-	1,779

தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் & ஆடிட்டர்கள் அறிக்கை

தலைவர்
இலங்கை பொறியியல் பேரவை

இலங்கை பொறியியல் பேரவையின் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவைகள் தொடர்பில் 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

மேற்குறித்த அறிக்கையின் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

ஒப்பம்/ **டப்ளியூ. பீ. சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :-

01. செயலாளர் - நீர்ப்பாசன அமைச்சு
02. செயலாளர் - நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தலைவர்
இலங்கை பொறியியல் பேரவை

இலங்கை பொறியியல் பேரவையின் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பில் 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொறியியல் பேரவையின் 2021 டிசம்பர் 31 இன் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆவது ஏற்பாட்டுடன் திருத்தப்பட்டதாகக் கூறப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைப்பு சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புறையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை எதிர்வரும் காலப் பகுதியில் பாராளுமன்றத்துக்கு முன் வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, பேரவையின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான நிதி நிலைமை மற்றும் அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதியோட்டம் ஆகியன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கடந்த வருடம் வருமான வரியாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 401,257 ஆன தொகையும் உள்ளடங்களாக மீளாய்வாண்டின் வருமான வரியாக ரூபா 1,656,196 ஆன தொகை மீளாய்வாண்டில் ஒட்டு மொத்த வரிப் பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெற வேண்டிய அங்கத்துவக் கட்டணங்கள் ரூபா 642,000 உள்ளடக்கப்பட்ட ரூபா 18,127,000 ஆன அங்கத்துவக் கட்டணம் வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அங்கத்துவப் பணத்தை கணிப்பிடுவதற்கு அடிப்படையாக அமைந்த அங்கத்துவ பதிவேடு கணக்காய்வுக்கு முன் வைக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த அங்கத்துவக் கட்டண வருமானத்தின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணாக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 பேரவையின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன் நான் பெற்றுக் கொண்ட, பேரவையின் 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, எனினும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அவற்றுக்குரியனவாக என்னால் முன் வைக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனும் வகுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் ஏனைய தகவல்கள் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயத்தின் ஊடாக ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், அது தொடர்பாக நான் எவ்விதத்திலும் சான்றுபடுக்கையை அல்லது அபிப்பிராயமொன்றை முன் வைக்க மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுக்குரிய எனது பொறுப்பாக மேற்குறித்த அடையாளம் காணப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு காணப்படுகையில் அது தொடர்பாகக் கூறுதல் மற்றும் அத்தகைய அடிப்படையில் செயற்படுகையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது ஏனைய வகையில் பெறப்பட்ட எனது அறிவுத் திறனின் அடிப்படையில் போதியளவில் ஒப்பீடின்றிய வகையில் காணப்படுகின்றதா எனும் விடயம் தொடர்பாக ஆராய்வதாகக் காணப்படுகின்றது.

இக் கணக்காய்வு திகதிக்கு முன் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களின் பிரகாரமும், என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும் இவ் ஏனைய தகவல்கள் போதுமானமளவில் பிழையாகக் குறீப்பிடப்பட்டிருப்பதாக நான் கருதுவதாயின், அவி விடயங்களை அறிக்கையிடுவதற்கு நான் பொறுப்புடைமையாகின்றேன். இது தொடர்பாக என்னால் அறிக்கையிடுவதற்கு விடயங்கள் காணப்படுவதில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும், ஆளும் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன் முறையை மேற்பார்வையிடும் பொறுப்பு, நிர்வாகத் தரப்பினரின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆவது உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பேரவை அதன் தன்னியக்க வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பெரும்பாண்மையான பிறழ் கூற்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக் கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித் தனியாகவோ அல்லது கூட்டு மொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக் கூடுமென நியாயமாக எதிர்ப்பார்க்கடுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் திரிப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன், என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல், மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டி விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டிபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட கணக்காய்வு கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாகக் குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினரை அறிவூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் குறிப்பாக ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் வாயிலாக ஏற்படக் கூடிய தாக்கங்களைத் தவிர்த்து, 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தரவுகளும், விளக்கப்படுத்துகைகளும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தொடர்புடைய நிதி அறிக்கைகளை நிறுவனம் தன் வசம் பராமரித்த வண்ணமிருந்தமையை அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது.

2.1.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் பேரவையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் பொருந்தக் கூடியனவாகவுள்ளன.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் முன் வைக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகள் முன் வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகளின் அடிப்படையிலும், போதியளவான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையாகக் கீழ் தரப்பட்ட வண்ணம் முன் வைப்பதற்கு எவ்விடயமும் எனது அவதானிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் பேரவையின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவருக்கு பேரவையுடன் தொடர்புபட்டு ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நிலைகளுக்குப் புறம்பாக தொடர்பு காணப்படுவதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர, ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது பேரவையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஒத்திசையாகாத வகையில் செயற்பட்டிருப்பதாக.

<u>சட்ட திட்டங்கள் / ஆணைகளினது குறிப்பு</u>	<u>அவதானிப்புகள்</u>
(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம்	
(i) அதிகார சட்டத்தின் 39.2 ஆம் பிரிவு	2020 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விரிவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்

காண்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 03 மாதங்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவ்வாறு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவை சட்டம்

(i) சட்டத்தின் 12 ஆம் பந்தி

பொறியியல் தொழிலில் உள்ளோரின் தொழிலை தவறாக பயன்படுத்துவதற்குரிய ஏதாவது விடயங்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்த வேண்டியிருந்த போதிலும் பொறியியல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தவறுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சட்டத்தின் 14 ஆம் பந்தியின் 15 மற்றும் 18 ஆம் பிரிவுகள்

பொறியியல் தொழிலில் ஈடுபடுபவராக பதிவு செய்திருந்தால் மாத்திரமன்று, பொறியியலாளர் பொறியியல் தொழிலுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடக் கூடாது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள படியாக பொறியியலாளர்களின் நிறுவனத்தின் (IESL) மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் (IIESL) ஆகியவற்றின் தொழில் வல்லுநர்கள் முறையே 20,248 மற்றும் 8,000 ஆன போதிலும், பொறியியல் பேரவையில் 18,127 பேர் மாத்திரம் பதிவு செய்திருந்ததுடன், அது தொடர்பில் தொடர்புடைய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு மற்றும் பதிவு செய்யாது பொறியியல் துறை சார் பணிகளில் ஈடுபடும் நபர்களை இனங் காணுவதற்கும் இயலுமான வாகையில் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iii) சட்டத்தின் அதிகரங்கள் (ஐ) பிரிவு

பொறியியல் வல்லுனர்களின் தொழில் முறைக்கேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்கான நடைமுறை தொடர்பாகத் தீர்மானிக்க வேண்டியிருப்பினும், அத்தகைய தொழிற் சார் முறைக்கேட்டு செயற்பாடுகள் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக இது வரை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பிரமானம் 395 (ஆ) மற்றும் (இ)	ஒவ்வொரு மாதத்துக்கும் உரித்தான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தயாரித்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன் வைக்க வேண்டியிருப்பினும், வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட திகதி வரை அத்தகைய அடிப்படையில் செயற்படாமையால் குறித்த காலப் பகுதியினுள் வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

2.2.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பேரவையின் அதிகாரங்கள், செயற் பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒத்திசையாகாத வகையில் செயற்பட்டிருப்பதாக.

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், பேரவையின் வளங்கள் சிக்கனமாகவும், பேண்தகு அடிப்படையிலும், வினைத் திறன் மிக்கதாகவும் மற்றும் பலனுறுதி மிக்கதாகவும் குறித்த காலப் பகுதிகளில் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெறுகை செயன் முறை பின்பற்றப்பட்டு பெறப்படவில்லையென.

ஒப்பம்/ **டப்ளியூ. பீ. சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி